ஆழத்து முத்துக்கள்

- ப. ஸ்ரீஸ்கந்தன் -

# கலைவேந்தன் கணபதி ரவீந்திரன்

ஈழத்து நகைச்சுவைக் கலைஞர்களுக் கென்று பேச்சு வழக்கு, தொனி, உடல் மொழி எனப் பல அம்சங்கள் இருந்தன. தென்னிந்திய சினிமா நகைச்சுவைக் கலைஞர்களை மிஞ்சும் அளவுக்கு அவர்கள் எம்மை வயிறு குலுங்கச்சிரிக்க வைத்தனர். அடங்காப்பிடாரி, வெளிக்கிட்டி விசுவடுவுக்கு, புளுகர் பொன்னையா, லண்டன் கந்தையா போன்ற நாடகக்கலைஞர்கள் மற்றும் டிங்கிரி - சிவகுரு சகோதரர்கள், அப்புக்குட்டி ராஜகோபால், கே.எஸ். பாலசந்திரன் போன்றோர் இவ்வாறு எம்மை மகிழ்வித்த கலைஞர்களில் சிலர். ஆயினும் மக்களைச் சிரிக்க வைக்கும் இவர்கள் போன்ற கலைஞர்கள் தற்போது மண்ணில் அருகி வருவதாகவே தெரிகிறது. இந்நிலையில், புலம்பெயர் மண்ணில் எமது ஈழத்துப் பாரம்பரிய நகைச்சுவைக் கலையை அதே மிடுக்கோடு ஆற்றுப்படுத்திவரும் ஒரு சில கலைஞர்களில் மிகவும் முக்கியமானவர் 'கலைவேந்தன்' கணபதி ரவீந்திரன் அவர்கள்.

நாடக நடிகராக, இயக்குனராக, ஒலிபரப்பாளனாக, திரைப்படக் கலைஞனாக, நிகழ்ச்சித் தொகுப்பாளராக, எழுத்தாளராக, ஓவியனாக அவர் வரித்த வகிபாகம் பல. இவ்வாறு பல்வேறு ஆற்றல் கொண்டு கலையே வாழ்வாக வாழும் அவரை ஆழத்து முத்துக்களில் பதிவதில் தாய்வீடு மகிழ்வுறுகிறது.

நல்லூரைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை - நல்லம்மா இணையரின் மகனான திரு-ரவீந்திரநாதன் ஆகிய கணபதி ரவீந்திரன் அவர்கள் தன் ஆரம்பக் கல்வியை கொட்டடி நமசிவாயம் வித்தியாசாலை, ஸ்ரான்லி கல்லூரி ஆகியவற்றிலும் உயர்கல்வியை செங்குந்தா இந்துக் கல்லூரியிலும், BA பட்டப்படிப்பை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக கனடாக் கிளையிலும் பயின்றவர். தனது 15வது வயதிலேயே ஈடுநாடு பத்திரிகையின் நல்லூர் நிருபராகப் பணியாற்றிய பெருமைக்குரியவர்.

பத்திரிகைத் துறையில் பணியாற்றும் காலத்தில் பல எழுத்தாளர்களின் தொடர்புகள் கிடைத்தால் இலக்கியத்தில் இவர் ஈடுபாடு கொண்டார். சிறுகதைகள், கவிதைகள் எழுத ஆரம்பித்த இவர் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி நடத்திய சிறுகதை, கவிதைப் போட்டிகளில் முதல் பரிசில்களைப் பெற்றார். 'அலைகள்' என்ற சிறுகதையும், 'தோழிக்கு தலைவி சொன்னாள்' என்ற கவிதையும் பரிசுபெற்ற இவரது ஆக்கங்களாகும். அரியாலை 62வது சுதேசிய திருநாளின் போது நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியிலும் இவர் முதற்பரிசு பெற்றுக்கொண்டார். ஒன்ராறியோ தமிழ் முதியோர் சங்கம் நடத்திய நாடகப்பிரதியாக்கல் போட்டியில் இவர் எழுதிய 'தவிப்பு' என்ற நாடகம் முதற்பரிசான 1000 டொலர்களைப் பெற்றது இவரது எழுத்தாற்றலுக்கு சான்று பகரும். மேலும் கதிரொளி, உயிர் எழுத்து ஆகிய இதழ்களின் ஆசிரியராகவும் பணிபுரிந்தார்.

ஓவியம் வரைதலில் இயல்பாகவே ஆர்வம் கொண்ட இவர் கொட்டடி ஸ்ரீநிவாசகம் வீதியில் வசித்த ஓவியர் வரன் அவர்களிடம் ஓவியம் வரையக் கற்றுத் தேர்ந்தார். 1969ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஆறுமுகநாவலர் நூற்றாண்டு விழாவின் போது



இவர் வரைந்த நாவலரின் பெரிய அளவிலான ஓவியம் ஸ்ரான்லி கல்லூரியில் வைக்கப்பட்டிருந்தது. இவர் வரைந்த Lions Club ஸ்தாபகர் மெல்வின் ஜோன் அவர்களின் கோட்டோவியம் கழகத்தின் ஒன்றுகூடலின்போது 15,000 ரூபாக்கு ஏலத்தில் விற்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தனது 15வது வயதில் 'சாம்பிராட் அசோகன்' நாடகத்தில் அசோகனாக வேடமேற்று நாடகவுலகில் கால்பதித்த இவர் கல்வியங்காடு உதயசூரியன் நாடக மன்றம், கலைக்குரிசில் நாடக மன்றம் என்பவற்றோடு இணைந்து பல்வேறு நாடகங்களில் பங்கேற்றார். தியாகலிங்கம் எழுதி இயக்கிய 'கைதி', ஆறுமுகம் எழுதி இயக்கிய 'உயிர் கொடுத்த உத்தமன்' என்பன அவற்றில் சிலவாகும். 'நடவடி நல்லூருக்கு' என்ற இவர் எழுதிய முதலாவது நாடகம் நகைச்சுவைக் கலைஞனாக இவரை அடையாளப்படுத்தியது.

இதன் பின்னர் தொழில் நிமித்தம் மத்திய கிழக்கு நாடொன்றுக்குச் சென்ற இவர் அதனைத் தன் கலைவாழ்வின் இருண்ட காலமாகக் குறிப்பிடுகிறார். 1997ல் கனடாவுக்குக் குடிபுகுந்த பின்னர் இவர் விரும்பியவாறு இவரது கலைவாழ்வு அமைந்து போனது. உதயன் பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு விழாவில் சுப்பிரமணியம் சுந்தரேஸ்வரன் எழுதி இயக்கிய 'சிதம்பர சக்கரம்' என்ற நாடகத்தில் நடித்து மிகவும் பிரபலமானார். சபையில் இருந்து மதுபோதையில் தள்ளாடியபடி 'எக்ஸ்கியூஸ்மி உங்களுக்கு ஏதும் பிரச்சனையோ' என்றவாறு அவர் மேடையேறும் காட்சி அட்டகாசமாக இருக்கும். ஸ்ரீமுருகன், தேவா சபாபதி ஆகியோரும் இந்நாடகத்தில் நடித்திருந்தனர். இந்நாடகம் இதுவரை 167 தடவைகள் மேடையேற்றப்பட்டுள்ளது. மேலும் Dr. பிகராடோவினால் தயாரிக்கப்பட்ட 'ஓட்டை' போன்ற பல நாடகங்களில் இவர் நடித்துள்ளளார்.

கணபதி ரவீந்திரன் எழுதி இயக்கிய தவிப்பு, காஸ் ஸ்டேசன் கனகலிங்கம், செத்தவீடு.கொம், உயிர்மூச்சு என்பன புகழ் பெற்ற இவரது நாடகங்களில் சிலவாகும். இவரது நாடகங்களில் ரூபி யோகதாசன், தேவா சபாபதி, சுஜாந்தன், சாந்தா சோமஸ் கந்தா, மனுவல் யேசுதாசன் ஆகியோர் நடித்துள்ளனர். ஒரு கலைஞன் சமூகத்தால் கைவிடப்படுகிறான் என்பதைக் கருவாகக் கொண்ட 'உயிர்மூச்சு' என்ற நாடகத்தில் இறந்த கலைஞனாக சவப்பெட்டிக்குள் படுத்திருந்து நடித்ததும், இன்னொரு நாடகத்தில் தன் வளர்ப்பு நாயுடன் அரைமணி நேரம் மேடையில் நடித்ததும் இவரது நாடக சகாப்தத்தின் மறக்கமுடியாத உணர்வு பூர்வமான காட்சிகளாகும்.

ரொறன்ரோவில் ரூபி யோகதாசனுடன் இணைந்து இவர் ஆரம்பித்த 'கனடிய தமிழ் கலைஞர் சங்கம்', 2004ம் ஆண்டிலிருந்து நடத்திவரும் நாடகப்பெருவிழா இவரது கலைவாழ்வின் முக்கிய அம்சமாகும். ஏறத்தாள 60 நாடகங்களை இவர்கள் தயாரித்து நாடகப் பெருவிழாவில் மேடையேற்றியுள்ளனர். வாழும் கலைஞர்களை கௌரவிக்கும் முகமாக அவர்களின் பெயரில் அரங்குகள் அமைக்கப்பட்டமை நாடகப் பெருவிழாவின் சிறப்பாகும்.

மேடை நாடகங்களுக்கு அப்பால் பல்வேறு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்குபற்றி இருந்தாலும், Tamil One தொலைக்காட்சியில் 'இது தான்டா இம்சை' என்ற தலைப்பின் கீழ் இவர் தயாரித்த சமகாலப் பிரச்சனைகளைச் சொன்ன தொடரானது தொடர்ச்சியாக 8 ஆண்டுகள் ஒளிபரப்பாகி சாதனை படைத்தது. இத்தொடர் நாடகங்களில் அர்ச்சனா மகேஸ்வரன், பிரேம்நாத் ரகுநாத், தீபா வசந்த், தேவா சபாபதி, ரூபி யோகதாசன் ஆகியோருடன் இணைந்து இவர் பிரதான பாத்திரத்தில் நடித்திருந்தார். அரைமணி நேரம் இடம் பெறும் ஒவ்வொரு நாடகத்தின் முடிவிலும் தொலைக்காட்சி நேயர்கள் அழைத்து நாடகம் குறித்த விமர்சனங்களை முன்வைக்கும் விதமாக நிகழ்ச்சி அமைக்கப்பட்டிருந்தது. உடல் உறுப்புக்கள் தானம் செய்வது பற்றிய ஒரு அங்கத்தின் முடிவில் 'இது நாடகம் அல்ல, உண்மைக் கதை' என்று கூறிய ரூபி யோகதாசன் நாளை கணபதி ரவீந்திரனுக்கு சிறுநீரக மாற்றுச் சிகிச்சை நடைபெறவுள்ளதாகவும் அச்சிறுநீரகத்தை தானே வழங்கவுள்ளதாகவும் குறிப்பிட்டு நேயர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கினார். சிக்கலான ஒரு சத்திரசிகிச்சைக்கு முதல் நாள் நாடகத்தில் நடிப்பதென்பது கலையை உயிர்மூச்சாகக் கொண்ட ஒரு கலைஞனால் மட்டுமே சாத்தியப்படும்.

தொலைக்காட்சிக்கு அப்பால் திரைப்படத்துறையிலும் கால் பதித்த இவர் கனவுகள், மனசு, உறவுகள், அதிகாலை 26 ஆகிய திரைப்படங்களில் நடித்துள்ளார். மேலும் ரூபி யோகதாசனின் இயக்கத்தில் உருவான கதிரொளி, கனேடியன் ஆகிய திரைப்படங்களிலும் நடித்துள்ளதுடன் அவற்றின் உதவி இயக்குனராகவும் பணியாற்றியுள்ளார்.

சிறந்த நிகழ்ச்சித் தொகுப்பாளரும், நேர்முக வர்ணனையாளருமான இவர் கனடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (CTBC), கனடியத் தமிழ் வானொலி (CTR), கீதவாணி, அனைத்துலக தமிழ் வானொலி (GTR) போன்றவற்றில் பணியாற்றியதுடன் இவர் கீதவாணியின் அலைவரிசையில் கதிரொளி என்ற வானொலியை நான்கு வருடங்கள் நடத்தினர். தற்போது 'யுகம்' என்ற 24 மணிநேர வானொலியில் திறம்பட நிகழ்ச்சி நடத்திவருகிறார்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி உரும்பிராய் பாடசாலைகள் சங்கம் வழங்கிய 'கலைவேந்தன்', அராலி மக்கள் மன்றத்தின் 'கலைக்குரிசில்', மொன்றியல் தமிழாழி நிறுவனம் அளித்த 'கலைஞானி' போன்ற பல பட்டங்கள் இவருக்குக் கிடைத்துள்ளன.

கலைவாழ்வில் பொன்விழா கண்ட கலைவேந்தன் கணபதி ரவீந்திரன் அவர்கள் மென்மேலும் கலைச்சேவையாற்ற வாழ்த்துகின்றோம்.



sriskandan@thaiveedu.com

உங்களுக்குத் தெரிந்த கலைஞர்கள் பற்றி
நீங்களும் எழுத வேண்டுமா?

கலைஞர்கள் பற்றிய விபரங்கள்,
அவர்களுடைய புகைப்படங்களுடன்
உங்களுடைய பெயர், தொலைபேசி எண், புகைப்படம்
மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டுக்கு
அனுப்பிவையுங்கள்.

Thaiveedu
Woodside Square, P.O.Box #63581
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

Phone: 416.857.6406
Fax : 416.849.0594
E-mail : info@thaiveedu.com